(முற்பகல் 10-10)

### 3. தகவல் கோரல்

**(1) சென்னையிலுள்ள இன்ஸ்ட்டியூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜி முதல்வரைப் பற்றி கல்வியமைச்சர் விளக்க வேண்டுவது பற்றி.**

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** துணைத் தலைவரவர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுப்பதற்கு முன், ஒரு பிரச்சினை. சிறிய விளக்கம் கேட்க விரும்புகிறேன். இங்கே கல்வி மானியக் கோரிக்கையின்மீது நடந்த விவாதத்திற்கு விடையளித்த கல்வியமைச்சர் அவர்கள் ஒரு செய்தியைச் சொன்னார்கள். இங்கே பேசிய எங்களுடைய கட்சித் தலைவர் அவர்கள் கூட சென்னையில் உள்ள இன்ஸ்ட்டியூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜியின் முதல்வரைப் பற்றிய செய்திகளைச் சொல்லும்போது, அவர் போதிய தகுதியில்லாமல் நியமிக்கப்பட்டிருக்கிறார், பல்வேறு முறைகேடுகளைச் செய்திருக்கிறார் என்று சொன்ன பிறகும், அப்படி இல்லை என்று ஆதாரபூர்வமாக அறிவிப்பதாக அமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்:** எந்த அடிப்படையில் உறுப்பினர் இந்தப் பிரச்சினையைக் கிளப்புகிறார்?

***திரு. க. மீனாட்சிசுந்தரம்:** ஒழுங்குப் பிரச்சினையாகக் கிளப்புகிறேன். இன்றைக்குக் கூட உயர்நீதிமன்றத்தின் உத்தரவு அவர் தகுதியற்றவர்—பதவியில் நீடிக்கக்கூடாது என்று அவரைப்பற்றி வந்திருக்கிறது. ஆகவே, இந்த அவையில் அமைச்சர் அவர்களால் ஒரு தவறான தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. உயர்நீதி மன்றத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கு மாறான தகவல் கல்வியமைச்சரால் தரப்பட்டிருக்கிறது. இது கல்வித் துறைக்கும், கல்வியமைச்சருக்கும் இழுக்கு ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே இது குறித்து அரசுத்தரப்பில் விளக்கம் தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் :** ஒழுங்குப் பிரச்சினை என்றால் முதலிலேயே தகவல் தெரிவித்தால், அதை அமைச்சரிடம் சொல்லி பதில் கொடுக்கச் செய்யலாம். திடீர் என்று இப்போது ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறீர்கள். பதில் சொல்ல ஒருவரும் இல்லை. இதுகுறித்து பின்னர் எடுத்துக்கொள்ளலாம். இப்போது கவன ஈர்ப்புத் தீர்மானம்.